

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | டிசம்பர் 26, 2019 | புரட்சி 18 | முழக்கம் 50 | விலை: ரூ.3.00


# 2019இல் கழகத்தின் களப் பணிகள்

*2019ஆம் ஆண்டில் திராவிடர் விடுதலைக் கழகம் ஆற்றிய களப்பணிகளை திரும்பிப் பார்க்கிறது. வழக்கமாக கழகத் தோழர்கள் நடத்தும் பெரியார், அம்பேத்கர் பிறந்த நாள், நினைவு நாள் நிகழ்வுகள், தமிழர் திருநாள் விழா நிகழ்ச்சிகள், தெருமுனைக் கூட்டங்களைத் தவிர, ஏனைய நிகழ்வுகள், கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளி வந்த பதிவுகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. கழக ஏடுகளான 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' ஏடுகளுக்கு சந்தாக்கள் சேர்க்கும் பணிகளில் பல மாவட்டங்களில் தோழர்கள் முனைப்புக் காட்டி செயல்பட்டனர். செயல்படாத மாவட்டங்களும் உண்டு. கழகத்தின் தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் இதற்காக மாவட்டம் தோறும் கழகப் பொறுப்பாளர்களை சந்தித்து சந்தா சேர்ப்பு இயக்கத்தை விரைவுபடுத்தினர். கழகத்துக்காக சொந்தமாக தலைமைக் கழகம் உருவானது – 2019ஆம் ஆண்டில். இது மிகவும் குறிப்பிடத்தக்கது.*

*மக்களவைக்கான தேர்தல் நடந்ததும் 2019ஆம் ஆண்டில்தான். புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளில் ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற முடிந்தது. தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றிகளைக் குவித்து, தமிழ்நாடு மதவாத சக்திகளை புறக்கணிக்கும் என்பதை உணர்த்தியது.*

*திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களின் 2019ஆம் ஆண்டு களப் பணிகளின் ஒரு தொகுப்பு:*

**ஜனவரி :** தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமியை கழகத் தலைவர் தலைமையில் கழகத் தோழர்கள் சேலத்தில் அவரது இல்லத்தில் சந்தித்து, 7 தமிழர் விடுதலையை வலியுறுத்தியும் ஈழத் தமிழ் ஏதிலியர்களுக்கு குடியுரிமை வழங்கக் கோரியும் மனு அளித்தனர் (ஜன. 14).

உயர்ஜாதி ஏழைகளுக்கு பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த 10 சதவீத தனி இடஒதுக்கீட்டைக் கண்டித்து கோவை, ஈரோடு, உடுமலை, சென்னை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட நகரங்களில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு கோவைக்கு வந்த பிரதமர் மோடிக்கு பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு நடத்திய கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்திலும் பங்கேற்று தோழர்கள் கைதானார்கள் (ஜன. 27).

திருப்பூர் புத்தகக் கண்காட்சியில் 'நிமிர்வோம்' இதழுக்காக திருப்பூர் தோழர்கள் தனி அரங்கு ஒன்றை எடுத்து கழக நூல்களை விற்பனை செய்தனர் (ஜன. 17 முதல்).

மயிலாடுதுறை கழகத் தோழர்கள் சட்டத்துக்குப் புறம்பான ஆக்கிரமிப்புக் கோயில்களின் பட்டியலைத் தயாரித்து காவல்துறை மாவட்ட ஆட்சி நிர்வாகத்திடம் வழங்கினர்.

**பிப்ரவரி:** உயர்ஜாதி இடஒதுக்கீட்டையும் பார்ப்பன இந்துத்துவாவையும் தனது கற்பனைத் திறனால் ஓவியங்களாக்கி இலயோலா கல்லூரியில் காட்சிப்படுத்திய ஓவியர் முகிலன் மிரட்டப்பட்டார். அவரது சில ஓவியங்கள் காட்சிப்படுத்த தடை செய்யப்பட்டது. அவருக்கு கழக சார்பில் சென்னையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது (பிப்.1)

'வரலாற்றில் பார்ப்பன வன்முறைகள்' என்ற கருத்தரங்கமும் கழக சார்பில் சென்னையில் நடத்தப்பட்டது (பிப்.20).

**மார்ச்:** 'உலக மகளிர் உரிமை நாள்' கூட்டத்தை ஈரோடு சித்தோடு பகுதியில் காவல்துறையின் தடையை மீறி தோழர்கள் நடத்தினார்கள் (மார்ச் 8).

அன்னை மணியம்மையார் நூற்றாண்டு விழா, வடசென்னையில் கழக சார்பில் முதன்முதலாக தொடங்கி வைக்கப்பட்டது (மார்ச் 9).

பொள்ளாச்சியில் நடந்த கூட்டு பாலுறவு வன்முறையைக் கண்டித்து கழக சார்பில் சென்னை (மார்ச் 15), பொள்ளாச்சி (மார்ச் 10), திருச்சி (மார்ச் 16), திருப்பூர் (மார்ச் 18), மேட்டூர் (மார்ச் 16) பகுதிகளில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தியது.

இலங்கை அரசு மீது போர்க் குற்ற விசாரணை நடத்தக் கோரி சென்னையில் அய்.நா. துணை நிறுவனங்களில் ஒன்றான 'யுனிசெப்' அலுவலகம் முன் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கழகம் பங்கேற்றது (மார்ச் 14).

திருப்பூரில் தலைமைக் குழு கூடி நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவைத் தெரிவித்தது. தன்னுரிமை தன்னாட்சிக் கோரிக்கையை தமிழ்நாடு முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது (மார்ச் 20).

கோவையில் ஃபாரூக் நினைவு நாளை மதவெறி எதிர்ப்புக் கருத்தரங்கமாக கழகம் நடத்தியது (மார்ச் 16). உச்சநீதிமன்றத் தீர்ப்பையொட்டி பழங்குடி மக்களை அவர்கள் வாழும் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தக் கூடாது என்று கள்ளக்குறிச்சி தோழர்கள் நடத்திய இயக்கத்தை பழங்குடி மக்கள் மகிழ்வுடன் வரவேற்றனர். ஈரோடு மரவபாளையத்தில் கழக சார்பில் ஒரு நாள் பயிற்சி வகுப்பு (மார்ச் 10) நடத்தப்பட்டது.

**ஏப்ரல் :** அறந்தாங்கியில் பெரியார் சிலை உடைப்பைக் கண்டித்து சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. கழக செயல்வீரர் பத்ரிநாராயணன் நினைவு நாள் 'வெளிச்சம் பெறாத தொண்டர்கள்' விழாவாக சென்னை மாவட்டக் கழகம் நடத்திய நிகழ்ச்சி உணர்ச்சியும் உருக்கமுமாக என்றென்றும் நினைவில் நிற்கும் நிகழ்வாக அமைந்தது (ஏப். 30).

இராசிபுரம் கழக சார்பில் அன்னை மணியம்மையார் நூற்றாண்டு விழா நடந்தது (ஏப். 21).

**மே :** கொளத்தூர் அய்யம் புதூரில் மே 23, 24 தேதிகளில் கழக சார்பில் புதிய இளைஞர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது.

மே 25இல் மேட்டூரில் நாத்திகர் பேரணியும் அன்னை மணியம்மையார் நூற்றாண்டு விழாவும் சிறப்புடன் நடந்தது. கொட்டும் மழையில் தோழர்கள் பேரணியாக வந்தனர்.

**ஜூன் :** மேட்டூர் நகரில் ஒரு நாள் கழகப் பயிற்சி முகாம் நடந்தது (ஜூன் 8).

திருப்பூர் இராயபுரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்துக்கு 'துரோணாச்சாரி' பெயர் சூட்டப்பட்டதற்கு கழகம் எதிர்ப்பு தெரிவித்தது. திருப்பூர் குன்னத்தூர் காவல் நிலைய வளாகத்தில் வினாயகன் கோயில் கட்டப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கழக முயற்சியால் கோயில் அகற்றப்பட்டது.

கோவை சரவணம்பட்டி அரசு தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியரின் ஜாதிவெறியைக் கண்டித்து கழகத் தோழர்கள் காவல்நிலையத்தில் புகார் அளித்தனர்.

**ஜூலை :** மேட்டூரில் கழகத்தின் தலைமைக் குழு கூடியது (ஜூலை 13). கழகத்தின் பரப்புரைப் பயணங்கள், கழகக் கட்டமைப்பு நிதி திரட்டலுக்கு திட்டமிடப்பட்டன. ஜாதி ஆணவப் படுகொலையைக் கண்டித்து கோவையில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது (ஜூலை 23). நடுவண் ஆட்சியின் வர்ணாஸ்ரமக் கல்விக் கொள்கையை விளக்கி கல்வியாளர்களைக் கொண்டு கோவையில் கழகத்தினர் கருத்தரங்கம் நடத்தினார்கள் (ஜூலை 12).

காமராசர் பிறந்த நாளையொட்டி திருப்பூர் மாவட்டக் கழகம் மூன்று நாள் பரப்புரைப் பயணங்கள் நடத்தியது (ஜூலை 14, 15, 16) சென்னை மாவட்டக் கழகம் வி.பி.சிங், காமராசர் சாதனைகளை விளக்கும் பொதுக் கூட்டம் நடத்தியது (ஜூலை 21).

உயர்ஜாதியினருக்கான 10 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து சென்னையில் மாவட்டக் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது (ஜூலை 29). மாட்டிறைச்சிக்கு ஆதரவாக முகநூலில் பதிவிட்டதற்காக கோவை மாநகர கழகப் பொறுப்பாளர் நிர்மல் குமார், இந்து முன்னணியினர் அளித்த புகாரில் கைது செய்யப்பட்டு 10 நாள் சிறையில் அடைக்கப்பட்டு, பிணையில் விடுதலையானார்.

**ஆகஸ்ட் 12 :** பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் திருக்குறள் மாநாடு காலை முதல் இரவு வரை நடந்தது.

(2ஆம் பக்கம்)

## தலைமைக் கழகம்: தோழர்களின் சாதனை

*2019ஆம் ஆண்டு கழகத் தோழர்கள் செயல்பாடுகளில் முன்னுரிமை பெற்றிருப்பது கழகத்துக்கு சொந்தமாக தலைமைக் கழகம் ஒன்றை வாங்கியதில் காட்டிய முனைப்பான செயல்பாடுகளாகும். கழகத் தோழர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒவ்வொருவரும் குறைந்தது ரூ.20,000 நிதி திரட்ட வேண்டும் என்று கழக தலைமைக் குழுவால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பெரும்பான்மைத் தோழர்கள் இலக்கை எட்டிக் காட்டினர். கழகத்தின் செயல்பாடுகள் மீது நம்பிக்கையும் கழகத்தின் மீது மதிப்பும் கொண்ட ஆதரவாளர்கள் தாமாகவே முன் வந்து நிதி வழங்கியதோடு, நிதி திரட்டும் இயக்கத்திலும் தங்களை இணைத்துக் கொண்டனர். இது கழகத்திற்குக் கிடைத்த மிகச் சிறந்த பெருமையாகும். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார ஏடும், 'நிமிர்வோம்' மாத இதழும் தடையின்றி வெளி வந்து கொண்டிருப்பதற்குக் காரணம் தோழர்கள் திரட்டிய சந்தாக்கள் தான்.*

## பா.ஜ.க.வின் வெற்று வாக்குறுதிகளை மக்கள் நம்ப மாட்டார்கள்

குடியுரிமைச் சட்டத் திருத்தத்தால் இந்தியர்களுக்கு பாதிப்பு இல்லை; எதிர்க் கட்சிகள் வதந்திகளைக் கிளப்புகின்றன என்று பா.ஜ.க. வினர் எதிர்ப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும் இதே குரலில் பேசுகிறார்.

இப்போது கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டத் திருத்தம் இஸ்லாமியர்களிடம் அச்சத்தை உருவாக்கியிருக் கிறது. தாங்கள் எதிர்காலத்தில் இரண்டாம் தர குடிமக்களாக்கப் படுவோம் என்று நியாயமாகவே உணருகிறார்கள்.

காரணம் இந்தச் சட்டத் திருத்தம் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ் தான் நாடுகளிலிருந்து இந்தியா வுக்கு வரும் இஸ்லாமியர் களுக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்பட மாட்டாது என்று கூறுகிறது.

இப்படி மத அடிப்படையில் குடிமக்களை தனிமைப் படுத்துவது, அரசியல் சட்டத் துக்கும் மதச் சார்பின்மைக்கும் எதிரானது. எனவே ஒதுக்கப் பட்ட இஸ்லாமியர்களுக்கும் குடியுரிமை வழங்கப்படும் என்று, ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்தாலே போதும். இதை மோடி அரசு செய்வதற்கு எந்த சட்டரீதியான தடையும் இல்லை. இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல; மத நம்பிக்கையற்ற நாத்திகர்களுக்கும் குடி யுரிமையை மறுக்கிறது, இந்த சட்டத் திருத்தம். நாத்திகராக இருக்கும் உரிமையை எந்த சட்டத்தாலும் பறித்து விட முடியாது. எனவே நாத்திகர் களுக்கும் குடியுரிமை உண்டு என்று சட்டத்திருத்தத்தை மாற்றியமைக்க வேண்டும்.

அதேபோல் ஈழத்திலிருந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் வாழும் ஏதிலி களுக்கும் குடியுரிமையை மறுக்கிறது இந்தத் திருத்தச் சட்டம். குடியுரிமை சட்டத்தில் 2004ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஒரு திருத்தம் உரிய ஆவணங்கள் இல்லாமல் ‘சட்ட விரோதமாக ஊடுருவிய வர்களுக்கு குடியுரிமை வழங்கக் கூடாது’ என்று கூறுகிறது.

இப்போது ‘சட்ட விரோத மாக’ என்ற சொற்றொடரை நீக்கினாலே ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க முடியும்.

இந்தத் திருத்தங்களை செய்ய முன்வராமல் வெற்று வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கும் மோடி ஆட்சியை மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள்.

இந்தியாவை இந்துராஷ் டிரமாக்குவதற்காக இஸ்லாமி யரை சட்ட ரீதியாக தனிமைப் படுத்தும் முதல் முயற்சி தான் இந்த சட்டத் திருத்தம். இது ஆர்.எஸ்.எஸ். செயல் திட்டம். எனவே தான் நாடு முழுதும் எதிர்ப்பு தீவிரமாகி வருகிறது என்பதை மோடி ஆட்சி உணர வேண்டும்.

‘இந்து’ ஆங்கில நாளேடு (டிச. 23) தனது தலையங் கத்திலும் இதைச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

# குடியுரிமைப் பதிவேடு: மோடியின் திடீர் பல்டிக்கு காரணம் என்ன?

1971ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு அசாமில் சட்ட விரோதமாக குடியேறிய வங்க தேசத்தவரை குடிமக்களாக ஏற்க முடியாது என்ற அடிப்படையில் அசாமிய குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. சுமார் 19 இலட்சம் பேர் உரிய ஆவணங்கள் இன்றி சட்ட விரோதமாக ஊடுருவியவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். குடியரசுத் தலைவராக இருந்த பக்ருதீன் அலி அகமது குடும்ப வாரிசுகள், கார்கில் போரில் போராடி குடியரசுத் தலைவரிடமிருந்து வீரப்பதக்கம் பெற்ற இஸ்லாமியர் குடும்பத்தினரும் சட்ட விரோத குடியேறிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பட்டியலில் இந்துக்களும் ஏராளம் உண்டு. இந்த 19 இலட்சம் பேரில் இந்துக்களை மட்டும் மீண்டும் குடிமக்களாக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள குடியுரிமை திருத்தச் சட்டம் அனுமதிக்கிறது. 2014ஆம் ஆண்டு வரை அசாமில் வாழ்ந்த இஸ்லாமியர் அல்லாதவருக்கு இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது தங்களின் வாழ்வாதாரத்தையும் அசாமியர் என்ற அடையாளத்தையும் கடுமையாகப் பாதிக்கும் என்று அசாமியர்கள் போராடி வருகிறார்கள்.

உள்துறை அமைச்சர் அமித்ஷா, அசாமைத் தொடர்ந்து அனைத்து மாநிலங்களிலும் குடியுரிமைப் பதிவேடு தயாரிக்கப்படும் என்று தொடர்ந்து பேசி வருகிறார். மாநிலங்களில் ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் இத்தகைய ‘பதிவேடு’ தயாரிப்பு வழியாக ‘உரிய ஆவணமற்றவர்கள்’ என்று அறிவித்து அவர்களின் குடியுரிமை பறிக்கப்படும் என்ற அச்சம் ஒவ்வொரு மாநில மக்களிடமும் உருவாகியுள்ளது. குறிப்பாக இஸ்லாமியர் குடியுரிமைகளைப் பறிப்பதில் குறியாக செயல்படும் பா.ஜ.க. இந்துத்துவ ஆட்சி மாநிலங்களில் வாழும் இஸ்லாமிய மக்களை குறி வைத்து இரண்டாம் தர மக்களாக்கி விடும் ஆபத்து இருக்கிறது. அதன் காரணமாகவே ஒரிசா, கேரளா, பீகார், மேற்கு வங்காளம், சிக்கிம், புதுவை மாநில முதல்வர்கள் இந்தப் பதிவேடு தயாரிப்பதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று அறிவித்து விட்டனர். தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட முதுகெலும்பு இல்லாத முதலமைச்சராக கூனிக் குறுகி நிற்கிறார்.

மக்கள் எதிர்ப்பு கடுமையாகி வரும் நிலையில் டெல்லியில் ராம் லீலா மைதானத்தில் டிசம். 22 அன்று பேசிய மோடி குடிமக்கள் பதிவேடு பிற மாநிலங்களிலும் தயாரிக்கும் திட்டம் இப்போது அரசிடம் இல்லை என்று அமித்ஷாவின் கருத்தை மறுத்துப் பேசியிருக்கிறார்.

ஏன் இந்த மாற்றம்? எதிர்ப்பை தற்காலிகமாக நிறுத்தி விடலாம் என்பதாலா? உள்துறை அமைச்சர் அமித்ஷா மோடியின் கருத்துக்கு என்ன பதில் கூறப் போகிறார்?

## திண்டுக்கல்லில் 20 ஆண்டுகளாக அரசு ஒப்புதலுக்காக முடக்கிக் கிடக்கும் வள்ளுவர் சிலை

திருவள்ளுவர் இலக்கியப் பேரவை மற்றும் பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் சார்பில், திண்டுக்கல்லில் அரசின் ஆணையிருந்தும் 20 ஆண்டுகளாகத் திறக்க முடியாமல் முடங்கியிருக்கும் திருவள்ளுவர் சிலையை உடனே நிறுவிட அரசின் ஒப்புதலை வேண்டி, 13.12.2019 அன்று காலை 10 மணியளவில் திண்டுக்கல் மணிக்கூண்டு அருகில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு உரையாற்றினார்.

மேலும் பெரியார் சரவணன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), கோவை இராமகிருட்டிணன் (தந்தை பெரியார் திராவிடர் கழகம்), பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி), குடந்தை அரசன் (விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி) உள்ளிட்ட தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## அயோத்தி தீர்ப்பு: சென்னையில் கருத்தரங்கம்

“வஹ்தத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் சார்பில், பாபர் மசூதி தீர்ப்பு ஒரு பார்வை” என்ற தலைப்பில் 14.12.2019 அன்று மாலை 6:30 மணியளவில், சென்னை பிராட்வே பிரகாசம் சாலையிலுள்ள ஹயாத் மஹாலில் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்வில் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். நிகழ்வில், பேராசிரியர் ஜவாஹிருல்லா (மாநில தலைவர், தமுமுக), பேராசிரியர் அ.கருணானந்தன் (வரலாற்றுத் துறை தலைவர்(ஓய்வு) விவேகானந்தா கல்லூரி, சென்னை), எஸ்.எம். பாக்கர் (மாநில தலைவர், INTJ), எஸ்.கே. ஷமீமுல் இஸ்லாம் (மாநில செயலாளர், வஹ்தத்தே இஸ்லாமி ஹிந்த்), செய்யது முஹம்மது புஹாரி (மாநிலத் தலைவர், வஹ்தத்தே இஸ்லாமி ஹிந்த்) ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டின் வெற்றிக்கு கழகத் தோழர்கள் உழைத்தனர்.

**செப்டம்பர் :** மண்ணின் மைந்தர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கிடவும் புதிய வர்ணாஸ்ரமக் கல்விக் கொள்கையின் ஆபத்துகளை மக்களிடம் விளக்கவும் கழக சார்பில் பரப்புரைப் பயணம் தொடங்கியது. திருப்பூர், விழுப்புரம், ஈரோடு, மயிலாடுதுறை, மேட்டூர், சென்னை என்று ஆறு முனைகளிலிருந்து பயணக் குழு செப். 17இல் தொடங்கியது. நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் நிறைவு விழா மாநாடு செப். 20ஆம் தேதி எழுச்சியுடன் நடைபெற்றது. முதலில் இந்தப் பயணம் ஆகஸ்டு 26இல் தொடங்கி 30இல் நிறைவடையத் திட்டமிடப்பட்டு பயணமும் தொடங்கிவிட்டது. முதல்நாள் பயணம் முடிந்த நிலையில் காவல்துறை பரப்புரைக்கு தமிழகம் முழுதும் திடீரென அனுமதி மறுத்தது. அறந்தாங்கியில் பெரியார் சிலை உடைப்புக் காரணமாக சட்டம் ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகும் என்ற காரணம் கூறி காவல்துறை அனுமதி மறுத்தது. பயண ஏற்பாடுக்கான வாகனம், ஒலிபெருக்கி, விளம்பரம் என்று பெரும் பொருள் செலவுடன் பயணத்தைத் தொடங்கிய நிலையில் பொருள் இழப்புக்கிடையில் பயணத்தை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தோழர்கள் தள்ளப்பட்டார்கள். மீண்டும் செப்டம்பரில் திட்டமிட்டபடி தோழர்கள் பயணத்தை நடத்தி முடித்தார்கள்.

சென்னையில் விநாயகர் அரசியல் ஊர்வலங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இதுவரை பெரியார் கைத்தடி ஊர்வலங்களை நடத்தி வந்த சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் இந்த ஆண்டு புத்தர் சிலைகளை ஏந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தி கைதானார்கள் (செப்.8).

**அக்டோபர் :** பள்ளிப்பாளையம் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தையொட்டி காமராசர் நினைவு நாளான அக்.2ஆம் தேதி புதிய கல்விக் கொள்கை நகல் கிழிப்புப் போராட்டத்தை சேலம், திருப்பூர், மயிலாடுதுறை, கோவை, ஈரோடு, பழனி, சென்னை ஆகிய ஊர்களில் தோழர்கள் நடத்தி கைதானார்கள்.

**நவம்பர் :** இராசிபுரத்தில் கழக சார்பில் ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. பெரியார் இயக்கம் 1957 நவம்பர் 26இல் அறிவித்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் கைதாகி சிறையிலும், விடுதலையான ஒரு மாதத்திலும் உயிர்நீத்த கழகப் போராளிகளை நினைவுகூர்ந்து திருச்சி, கோபி, கோவையில் பெரியார் சிலை முன் கழகத் தோழர்கள் ஜாதி எதிர்ப்பு உறுதி ஏற்றனர். திருப்பூரில் சட்ட எரிப்புப் போராட்டத்தின் வரலாற்றை நினைவுகூரும் பொதுக் கூட்டத்தை கழகம் நடத்தியது.

நவம்பர் 25 அன்று கழக சார்பில், அம்பத்தூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. விடுதலைப் புலிகள் இராணுவப் பயிற்சி எடுத்த கொளத்தூர் புலியூரில் மாவீரர் நாளை கழகம் எழுச்சியுடன் நடத்தியது (நவம்பர் 26).

இலங்கையில் தமிழர்களை இனப் படுகொலை செய்து இப்போது அதிபராகியுள்ள கோத்தபய ராஜபக்சேவை மோடி ஆட்சி விருந்தினராக அழைத்து சிவப்புக் கம்பள வரவேற்பு தந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் இலங்கை தூதரகத்தை முற்றுகைப் போராட்டம் நடத்தி கைதானார்கள்.

**டிசம்பர் :** மேட்டுப் பாளையத்தில் ஜாதிச் சுவர் இடிந்து, 17 தலித் மக்கள் உயிர்ப் பலியானதைக் கண்டித்து கழக சார்பில் சென்னையிலும் (டிசம்பர் 3), சேலத்திலும் (டிசம்பர் 4) கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கழகத்தின் தலைமைக் குழு சென்னையில் தலைமைக் கழக அலுவலகத்தில் கூடி செயலவையில் முன் வைக்க வேண்டிய பிரச்சினைகளை விவாதித்தது. டிசம்பர் 28ஆம் தேதி கழக செயலவையை சென்னையில் கூட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**– நமது செய்தியாளர்**

# பள்ளிபாளையம் மாநாட்டில் கொளத்தூர் மணி உரை

# நகர்ப்புற ஏழைகளைப் பற்றி மட்டுமே பேசுகிறது, புதிய கல்விக் கொள்கை

*பள்ளிபாளையத்தில் 20.9.2019 அன்று நடந்த திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

இதற்கு முன்பாக மண்டல அளவில் தான் மத்திய அரசுப் பணிகளுக்கு தேர்வு செய்து பணியில் அமர்த்தப்பட்டார்கள். இந்தியாவை ஒன்பது மண்டலங்கள் மற்றும் இரண்டு துணை மண்டலமாக பிரித்திருந்தார்கள். அதில் தேர்வு நடக்கும். நமக்கு கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு சேர்ந்தது மண்டலமாக இருந்தது. இப்போது அதை மாற்றி ஒரே நாடு கொள்கைப் படி அகில இந்திய தேர்வாக மாற்றி விட்டார்கள். இப்போது இந்திய அளவில் தேர்வுகள் நடைபெறுவதால் கேள்வித்தாளை இரண்டே மொழியில் தான் கொடுக்கிறார்கள். ஒன்று ஆங்கிலம் மற்றொன்று இந்தி. இதில் இந்தி பேசத் தெரிந்த மாநிலத்தைச் சேர்ந்தவன் தாய் மொழியில் தேர்வெழுதுவான். நாமெல்லாம் அந்நிய மொழியில் தேர்வெழுதுவோம். ஆங்கிலமும் நமக்கு அந்நிய மொழி தான்.

மோடி ஆட்சிக்கு வந்த பின் ஒரு நிகழ்வு நடந்தது. அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., அய்.எப்.எஸ். ஆகிய உயர் பதவிகளுக்கான தேர்வில், ஆங்கிலத்தில் திறனறி தேர்வு முறை இருந்தது. வெறும் 25 மதிப்பெண்ணிற்கு அத்தேர்வு இருந்தது. ஆங்கிலத்தில் ஒரு செய்தியை சுருக்கமாக கொடுக்கிற ஆற்றல் இருக்கிறதா என்பது தான் அந்த தேர்வு முறை. ஆங்கிலத்தில் செய்திகளை பரிமாறிக் கொள்வதற்கான திறன் இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டது. இதை எதிர்த்து வடநாட்டுக்காரர்கள் போராடினார்கள். நாங்களெல்லாம் கிராமத்தில் இருந்து வருகிறோம் எங்களுக்கு எப்படி ஆங்கிலம் தெரியும் என்று, அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., அய்.எப்.எஸ். அதிகாரிகளாக வரக் கூடியவர்களே போராடினார்கள். மோடி உறுதியளித்தார். தேர்வு வேண்டுமானால் நடக்கட்டும் தரப்பட்டியல் எடுக்கும் போது அதை நாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டோம் என்றார். அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., அய்.எப்.எஸ்.க்கு ஆங்கிலம் வேண்டாமென்ற அந்த அரசு தான், நம் மாநிலத்தில் சாதாரண வேலைக்கு போக வேண்டுமென்றால் கூட ஆங்கிலம் அல்லது இந்தியில் தேர்வெழுத வேண்டுமென்று கூறுகிறது. இங்கே 11 மற்றும் 12ஆம் வகுப்பு படித்தவர்கள் எப்படி அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற முடியும்? வடநாட்டுக்காரர்கள் தாய்மொழியான இந்தியில் தேர்வெழுதுவார்கள். எனவே தான் நாம் முன்வைத்தோம், மத்திய அரசு நிறுவனங்களுக்கு மாநில மொழிகளில் தேர்வு நடத்து, மாநில அளவில் நடத்து, மாநில மொழிகளில் கேள்வித்தாளை கொடு என்று. 1934ஆம் ஆண்டிலேயே சென்னை மாகாணத்திலிருந்து குரல் எழுந்தது; சென்னை மாகாணத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடு என்று. எப்படி தமிழ்நாட்டுப் பணிகளுக்கு வகுப்புவாரி முறை இருக்கிறதோ அதேபோல் மத்திய அரசு பணிகளுக்கும் கேட்டார்கள். கேட்டுக் கொண்டே இருந்ததால் அப்போதிருந்த ஆங்கிலேய ஆட்சி 1935ஆம் ஆண்டே ஏற்றுக் கொண்டது. தனியாக ஒரு சட்டத்தை இயற்றினார்கள். சென்னை பார்ப்பனரல்லாதோர் வகுப்புவாரி சிறப்புச் சட்டம். சென்னை மாகாணத்தில் உள்ள மக்களுக்கு, சென்னை மாகாணத்தில் உள்ள மத்திய அரசு பணிகளுக்கு வகுப்புவாரி ஒதுக்கீடு உண்டு என்று ஆங்கிலேயர்கள் சட்டம் போட்டார்கள். 1936லிருந்து நடைமுறையில் இருந்தது. இந்தியாவிற்கு விடுதலை வந்த பின்பு தான் நமக்கு அடிமைத்தனமே வந்தது. அந்த உரிமைகள் நமக்கு இல்லாமல் போனது.

தற்போது எல்லாமே தலைகீழாக நடக்கிறது. நாம் ஒரு காலத்தில் சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்று கேட்டோம்; சமஸ்கிருதம் படிக்கக் கூடாது என்றார்கள். வேதங்களில் என்ன இருக்கிறதென்று அறிந்து கொள்ளப் படிக்கிறோம் என்று கேட்டோம். நம்மைப் போன்றவர்கள் இல்லை! டாக்டர் அம்பேத்கர் போன்ற அறிவாளிகள், உலகின் மிகச் சிறந்த அறிவாளியாகக் கருதப்பட்ட அம்பேத்கர் போன்றவர்களெல்லாம் இந்த நாட்டு சாஸ்திரங்களை ஆய்வு செய்ய வேண்டும், புராணங்களைப் படிக்க வேண்டும், ஜாதி உருவாக்கத்தைப் புரிந்து கொள்ள முயற்சித்துக் கேட்ட பொழுது சமஸ்கிருதத்தை கற்றுக் கொடுக்க மறுத்து விட்டார்கள். சின்ன ஜாதிக்காரர்கள் சமஸ்கிருதம் படிக்கக் கூடாது என்று மறுத்துவிட்டார்கள். பார்சி மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வேதங்களையும், புராணங்களையும் படித்துத்தான் அம்பேத்கர்



**இப்போதிருக்கிற பரீட்சை முறை மாணவரின் அறிவை சோதிப்பதாக இல்லை, அவர்களுடைய ஞாபக சக்தியை சோதிப்பதாக இருக்கிறது என்றார் பெரியார்**

ஆய்வுகளை மேற்கொண்டார், புத்தகங்களை எழுதினார். அப்பொழுது ஜாதியின் தோற்றத்தை தெரிந்து கொள்ள படிக்க வேண்டும் என்று கேட்ட பொழுது மறுத்தார்கள்; இப்போது சமஸ்கிருதம் வேண்டாம் என்கிறோம், ஆனால் கட்டாயம் படிக்க வேண்டும் என்கிறார்கள். அனைத்து வகுப்புகளுக்கும் சமஸ்கிருதம் உண்டு என்கிறார்கள். நம்மை மட்டுமல்ல ஆய்வுப் (Phd) படிப்பைப் படிப்பவர்களுக்குக்கூட சமஸ்கிருத பாடம் உண்டு என்கிறார்கள். பார்ப்பனரல்லாதார் வேலைக்கு சென்றபோது தகுதி திறமை குறைந்து விட்டது என்றார்கள். அப்போது தான் பெரியார் சொன்னார் ‘இப்போதிருக்கிற பரீட்சை முறை மாணவரின் அறிவை சோதிப்பதாக இல்லை, அவர்களுடைய ஞாபக சக்தியை சோதிப்பதாக இருக்கிறது’ என்று 1925லேயே கூறினார். இல்லை இல்லை இது தான் தேர்வு முறை என்று கூறினார்கள். நம் மாணவர்களும் சரி இதுதான் தேர்வு முறையா அதையும் பார்த்து விடலாம் என்று படித்தார்கள்; அதிக மதிப்பெண் பெற்றார்கள். வேலைக்குச் செல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

மருத்துவப் படிப்பில் (MBBS) 2800 இடங்களில் வெறும் 65 இடங்களை மட்டும்தான் பார்ப்பன மாணவர்கள் பெற்றார்கள். நீட் நுழைவுத் தேர்வு வருவதற்கு முன்னால் வரை, ஏனென்றால் நம் மாணவர்களும் படித்தார்கள், மனப்பாடம் செய்தார்கள், அதனால் அவ்வளவு இடங்களைப் பெற்றார்கள். இப்போது சொல்கிறார்கள், இதெல்லாம் இல்லை தகுதி திறமையெல்லாம் இல்லை எல்லா ஜாதிக்காரர்களுக்கும் பிரித்துக் கொடுங்கள், பாவம் வசதி இல்லாத ஏழைகளுக்கு, யார் இவர்கள்? உயர்ஜாதி ஏழைகள். ஏழைகள் என்று சொல்லுங்கள், பொருளாதார இட ஒதுக்கீட்டை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை இருந்தாலும் ஏழைகள் என்று சொல்லுங்கள், ஆனால் உயர்ஜாதியில் உள்ள ஏழைகளுக்கு மட்டும் என்பது என்ன? ஏன் கீழ் ஜாதியில் உள்ள ஏழைகளெல்லாம் படிக்க கூடாதா?

அதையே தான் இந்த தேசியக் கல்விக் கொள்கையிலும் சொல்கிறார்கள், அனைத்து இடங்களிலும் ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள்.

Urban Poors - நகர்ப்புற ஏழைகள் என்று கூறுகிறார்கள். சரி கிராமப்புற ஏழைகள்? நம்மைப் பற்றி எந்தப் பதிவும் இல்லை இந்த கல்வி அறிக்கையில். நகர்ப்புற ஏழைகளைப் பற்றி மட்டும் தான் பேசப்படுகிறது. அவர்களுக்கான கல்வியைப் பற்றி மட்டும்தான் பேசப்பட்டுள்ளது இந்த கல்வி அறிக்கையில். வேலை வாய்ப்பில் உயர்ஜாதி ஏழைகள், கல்வியில் நகர்ப்புற ஏழைகள். எப்படிப்பட்ட பித்தலாட்டமான அறிக்கையை நம்மிடம் கொடுத்துள்ளார்கள் பாருங்கள். நாம் இதைப் படிப்பது இல்லை. நான் அடிக்கடி சொல்வதுண்டு, நம்மவர்கள் சொல்வார்கள் வேதத்தில் என்னென்னமோ உண்டு என்று சொல்வார்கள். என்ன இருக்கிறது என்று கேட்டால் தெரியாது. வேதத்தில் என்ன உள்ளது? ஊரில் பேசிக்கொள்வார்கள். ‘டேய் மாப்ள வாடா சரக்கு வாங்கி வெச்சுருக்கேன், கறி வறுத்து வெச்சுருக்கேன் இன்னைக்கு அவனை போட்ரனும்டா’ - இதே உரையாடல்கள் சமஸ்கிருதத்தில் இருப்பது தான் வேதம்! இந்திரனிடம், ‘உனக்கு சுரா பானம் படைக்கிறேன், சோம பானம் படைக்கிறேன் இன்னின்ன மாமிசங்களைப் படைக்கிறேன், அந்த கருப்பர்களை ஒழிப்பாயாக!’ இது தான் வேதங்களில் உள்ளது. நம்மவர்கள் படிக்காமலேயே வேதங்களில் அனைத்தும் உள்ளதென்று கூறுவார்கள். கல்வி அறிக்கையும் அப்படித்தான். புதிய கல்விக் கொள்கை அறிக்கையையும். தமிழக அரசு தற்போது ஒரு ஆபத்தான சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. ‘பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு நீதி போதனை செய்வதற்கு வெளியில் இருந்து ஆட்கள் வரலாம்’ என்று ஒரு சுற்றறிக்கை கொடுத்துள்ளது. இந்தக் கல்விக் கொள்கையில் பல இடங்களில் ஒரு சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆசிரியர்களுக்கு இந்த கல்விக் கொள்கையில் ஏராளமான கட்டுப்பாடுகளை வைக்கிறார்கள். ஆசிரியப் பயிற்சி இனி நான்காண்டுகள். முடித்தாலும் பணிக்குத் தேர்ந்தெடுப்பது அவர்கள் பாடம் நடத்துவதைப் பார்த்து தானாம், உறுதிப்படுத்துவதற்கு மூன்று வருடங்களாம், சம்பள உயர்வோ, பதவி உயர்வோ பணியாற்றும் திறமையைப் பார்த்துத்தான் கொடுப்பார்களாம், பணியாற்றிய காலம், அனுபவம் ஆகியவற்றைப் பார்க்கமாட்டார்களாம். மேலும், சொல்கிறார்கள், பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்தால் அத்தியாயம் 2 இல் Community Members யை சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள்; அத்தியாயம் 7 இல் Civil Society Members யை வைத்து வகுப்புக்கள் நடத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

அத்தியாயம் 8 இல் Civil Society Organizationயை வைத்துக் கொள்ளலாம் என்கிறார்கள். மற்றும் Eminent Persons அறிவார்ந்த உள்ளூர்காரர்களையும் பாடம் நடத்த வைத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. நாங்க சொல்கிறோம் இவையனைத்தும் ஆர்.எஸ்.எஸ்.சை மனதில் வைத்துத்தான் சொல்கிறார்கள்;. மேலே குறிப்பிட்டுள்ளதெல்லாம் ஆர்.எஸ்.எஸ். நபர்களை கல்வித் துறைக்குள் நுழைப்பதற்காகத்தான். நமது தமிழ்நாடு அரசும் அதற்கு ஆதரவாக ஒரு உத்தரவை வெளியிட்டு விட்டார்கள். இந்த மேடையில் குழந்தைகள் பாடினார்கள் காமராசரை நினைத்தால் கண்ணீர் வருகிறதென்று, இந்தக் கல்விக் கொள்கையை நினைத்தாலும் கண்ணீர் நிற்காமல் வந்து கொண்டே தான் இருக்கும். அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதற்காக ஒரு கிலோமீட்டருக்கு ஒரு தொடக்கப் பள்ளி அய்ந்து கிலோ மீட்டருக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என்று சொன்னதற்கு மாறாக குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ள பள்ளிகளை மூடி விட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார் இராஜகோபாலாச்சாரி. புத்தியில்லாத இராஜாஜி அவ்வாறு செய்தார். இராஜாஜியைப் பற்றி சொல்வார்கள், இராஜாஜிக்கு உடம்பெல்லாம் மூளை என்று, உடம்பெல்லாம் மூளை என்றால் அது வியாதி. தலைக்குள் மட்டும்தான் மூளை இருக்க வேண்டும். அவர் கூட பள்ளிக் கூடங்களை மூடினார். இவர்கள் (மோடி வகையறா) பள்ளிக்கூடங்களை இணைக்கப் போகிறார்களாம். குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் வரும் பள்ளிக்கூடங்களைப் பக்கத்துப் பள்ளிக்கூடங்களுடன் இணைத்து விடுவார்களாம். பள்ளியை வேறொரு பள்ளியோடு இணைத்து விட்டு, மூடப்பட்டப் பள்ளிக் கட்டிடத்தில் நூலகம் வைக்கப்போகிறார்களாம். பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கே மாணவர்கள் வராத காரணத்தினால் பள்ளிக்கூடத்தை மூடுவதாக சொல்லிவிட்டு நூலகம் வைத்தால் அதில் யார் வந்து படிப்பார்கள்? இதைத்தான் கல்விக் கொள்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

### 46 அரசு பள்ளிகளை மூடிய தமிழக அரசு

இன்னும் அந்தக் கல்விக் கொள்கை நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் தமிழ்நாடு அரசு இப்போதே குறைவான மாணவர் எண்ணிக்கை உள்ள 46 பள்ளிக்கூடங்களை மூடிவிட்டது. மாணவர்கள் இல்லாமலில்லை, இலவசமாகக் கற்பிக்கும் அரசுப் பள்ளிக்கு வருவதில்லை; ஆனால் கட்டணம் செலுத்தி தனியார் பள்ளிக்கு செல்கிறார்கள். அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல் பள்ளிகளை மூடுவது ஏனோ? மாவட்டங்களில், கிராமப்புறங்களில் மூடியதோடு, இப்போது சென்னை மாநகரில் மட்டும் 16 பள்ளிக்கூடங்களை கணக்கெடுத்து வைத்துள்ளார்கள் மூடுவதற்காக. மூடிய பள்ளிகளை நூலகமாக மாற்றப் போவதாகவும் அறிவித்துவிட்டார்கள். 3, 5, 8 ஆகிய வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு நடத்தப்படும் என்பது கல்விக் கொள்கையில் உள்ளது. ஆனால் தமிழ்நாடு அரசு 5, 8 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வை அறிவித்து விட்டார்கள். தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு எவ்வளவு உண்மையாகவும், விசுவாசமாகவும் இருக்கிறார்கள் என்று பாருங்கள்! மக்களுக்கு விசுவாசமாக இல்லை மத்திய அரசுக்கு. இப்படிப்பட்ட நிலையில்தான் மக்களிடம் இதன் ஆபத்தை நாம் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றொரு ஆபத்தும் அத்தியாயம் 18இல் உள்ளது அது, ‘வெளிநாட்டில் இருந்து பல்கலை கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் வரலாம்’ என்று அனுமதி கொடுத்துள்ளது இந்த தேசியக் கல்விக் கொள்கை. அது மட்டுமில்லாமல் தற்போது அய்ம்பதாயிரம் கல்லூரிகள் உள்ளன. 2022இல் மோசமான கல்லூரிகளுக்கெல்லாம் அனுமதி இரத்து செய்துவிடுவார்களாம், அதை மறுபடியும் நூலகமாக மாற்றிவிடுவார்கள். இப்படித்தான் இந்த கல்விக் கொள்கையில்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# குடியுரிமைச் சட்டத் திருத்த எதிர்ப்புப் பேரணியில் கழகம் பங்கேற்பு




குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னையில் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் டிசம்பர் 23ஆம் தேதி நடந்த மாபெரும் பேரணியில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டனர். தி.மு.க. கூட்டணி கட்சிகளைத் தவிர, இஸ்லாமியர் அமைப்புகள், பல்வேறு இயக்கங்கள் பங்கேற்றன. திராவிடர் விடுதலைக் கழகம் பேரணியில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் பங்கேற்றது. அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், தலைமைக் குழு உறுப்பினர்கள் இரா. உமாபதி, அய்யனார், அன்பு தனசேகர் மற்றும் மயிலை சுகுமார், வடசென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் ஏசுகுமார், ராஜீ, தென் சென்னை மாவட்டக் கழகத் தலைவர் வேழவேந்தன், எம்.ஜி.ஆர். நகர் கரு. அண்ணாமலை உள்ளிட்ட சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் ஏராளமாகப் பங்கேற்றனர்.

ஈரோட்டிலிருந்து 20க்கும் மேற்பட்ட தோழர்களும் குடியாத்தம் பகுதி, காஞ்சிபுரம் பகுதி கழகத்தினரும் பேரணியில் பங்கேற்றனர்.

கழகக் கொடிகளுடன் ஒலி பெருக்கி வழியாக கழகத் தோழர்கள் முழக்கங்களை எழுப்பி வந்தனர். எழும்பூர் தாளமுத்து நடராசன் மாளிகையில் தொடங்கிய பேரணி, இராஜரத்தினம் விளையாட்டு மைதானம் அருகே நிறைவடைந்தது. ஒன்றரை மணி நேரம் பேரணி நடந்தது. தி.மு.க. தலைவர் ஸ்டாலின், தி.க. தலைவர் கி. வீரமணி, ப. சிதம்பரம் (காங்கிரஸ்) உள்ளிட்ட தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் பேரணியின் முன் வரிசையில் நடந்து வந்தனர். தமிழ்நாடு பா.ஜ.க.வின் மதவெறியை ஒரு போதும் தமிழ்நாடு ஏற்காது என்பதை பேரணி உணர்த்தியது.

## அயோத்தி தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்

அயோத்திப் பிரச்சினையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் பேராசிரியர் ஜவாஹிருல்லா தலைமையில் டிசம்பர் 6ஆம் தேதி மாலை 4 மணியளவில் சென்னை வள்ளுவர்கோட்டம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு தீர்ப்பில் உள்ள முரண்பாடுகளை சுட்டிக்காட்டி உரையாற்றினார். மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி ஜி. இராமகிருட்டிணன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சிந்தனைச் செல்வன், திருமுருகன் காந்தி உள்ளிட்ட பலரும் பேசினர். அதைத் தொடர்ந்து சென்னை சேப்பாக்கத்தில் இந்திய தவ்ஹீத் ஜமாத் கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் பங்கேற்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார்.

## தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ இதழ்களுக்கு சந்தாக்களை புதுப்பிக்கும் பணிகளை தோழர்கள் விரைந்து தொடங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- நிர்வாகி



**சுயமரியாதையே – நமது ‘குடியுரிமை’**
**ஜாதி மறுப்பே – நமக்கான ‘பதிவேடு’**

– திராவிடர் விடுதலைக் கழகம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)


குறிப்பிடப்பட்டுள்ளது. அய்ம்பதாயிரம் உயர் கல்வி நிலையங்களை 2035ற்குள் 12,300 ஆக குறைக்கப் போகிறார்களாம். மாணவர்கள் எண்ணிக்கைக் கூடக் கூட கல்லூரிகளை அதிகரிப்பார்கள் ஆனால் இந்த அறிவாளிகள் கல்லூரிகளைக் குறைக்கிறார்களாம். ஏன் என்றால்? 10ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை 8 முறை பொதுத் தேர்வுகளை வைக்கிறார்கள். எப்படியும் மாணவர்கள் வர மாட்டார்கள் என்று குறைக்கிறார்கள் போலிருக்கிறது. இந்தத் தேர்வுகளில் மாணவர்களுக்கு அதிக உரிமை தருகிறார்களாம்; எப்போது மாணவர் விருப்பப்படுகிறாரோ அப்போது எழுதலாம் என்று. மாணவர்கள் தற்போதிருக்கும் தேர்வு முறையில் தேர்ச்சி பெறுவதே கடினம். இப்படிச் சொன்னால் மாணவர்கள் எப்படி தேர்ச்சி பெறுவார்கள்.

B.A, B.Sc எல்லாம் நான்கு வருடங்களாக மாற்றிவிட்டார்கள். நான்கு வருடமென்று கவலைப்பட வேண்டாம். ஒரு வருடத்தில்கூட கல்லூரியை விட்டு வெளியேறலாம் அதற்கு Diplomo என சான்றிதழ் வழங்கப்படும். இரண்டு வருடம் படித்து விட்டு சென்றால் Special Diplomo என்று சான்றிதழ் தருவார்களாம். மூன்று வருடம் என்றால் வெறும் B.A., நான்கு வருடம் படித்தால் BLA (Batchelor of Liberel Arts) என்று சான்றிதழ் வழங்கப்படுமாம். நமது மாணவர்கள் நான்கு வருடம் முழுமையாக படிப்பார்களா?

(தொடரும்)

## வெளிவந்து விட்டது

**‘நிமிர்வோம்’ – டிசம்பர் 2019 இதழ்**




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745 / 7299230363 / 7373684049

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
**சிந்தாமணி சில்க்ஸ்**
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th December 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN